ஓம்

தருமசீலன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 7	இரத்தாட்சி௵ மார்கழி௴ 1925௵ ஜனவரி௴	சஞ்சிகை 9

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

பெண்களின் தேக இயற்கை.

"போதொடு நான மூழ்கிப் பூம்புகை தவழ்ந்து முல்லைக்
கோதைகண் படுக்குங் கூந்தல் குரைவளி பித்தோடையே
யதஞ்செய் மலங்க ணெய்த்தோ ரிறைச்சியென் பீருண் மூளை
கோதஞ்செய் குடர்கள் புன்றோ னரம்பொடு வழும்பி தென்றான்."

(இ-ள்.) "புழுகிலே படிந்து, இனிய வாசனைப்புகை தவழப்பெற்று, சூட்டிய மலருடனே, முல்லைமாலை துயில்கொள்ளும் (அதாவது அணியப்பட்டுத் தங்கியிருக்கும்) கூந்தலையுடைய பெண்ணே! இந்த உடம்பானது, சப்தத்தைச் செய்கின்ற வாதத்தையும், பித்தத்தையும், கபத்தையும் பொருந்தின மலங்களும், உதிரமும், தசையும், எலும்பும், ஈரலும், மூளையும், பொல்லாங்கு செய்யும் குடல்களும், அற்பமாகிய தோலும், நரம்பும், நிணமுமாமென்று அறிஞன் கூறினான்; (ஆதலின், மயக்கமுடையவர்களால் இனிமையாகக் கருதப்படும் பெண் தேகமானது மிக்க அருவருப்புடையதாம்)" என்பதாம்.

புழுகு, மலர் முதலியவற்றை அணிந்த மாதர்கள், தங்களை மிக்க அழகுடையவர்களென்று தற்பெருமை அடைகின்றார்கள்; அவர்கள் அங்ஙனமடையும் பெருமைக்குத் தக்கபடி, அவர்களைக்கண்ட ஆடவர்களும் மயங்கி அவர் உடம்பினை இனிமையுடையதெனப் புகழ்ந்து கொண்டாடுகின்றார்கள். அவ்வுடம்பு மலங்களும், உதிரமும், நிணமும், தசையும், நரம்பும், தோலும் நிறைந்த ஓர் ஆபாசக் கொட்டில் என்பதை இவர்கள் உணர்வதில்லை. ஆதலின், அவ்விரு வகையார்களும், தேகத்தின் இழிந்த தன்மையை உணர்ந்து, அதன் நிலையற்ற அற்ப சுகத்தை நாடாமல், நிலைத்த பேரின்பத்தை யடைதற்கான தவமார்க்கத்தை நாடி உய்யும் பொருட்டு இங்ஙனம் ஓர் அறிஞன் அலங்காரத்துடனே நின்ற பெண்ணொருத்தியை நோக்கி மேலுக்கு அழகாகத்தோற்றும் பெண்ணின் உடம்பியற்கையை உள்ளபடி கூறினான். இதனால், மாதர் அழகும், இளமையுமுள்ள தேகம் அருவருக்கத் தக்கதென்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளலாம்.

போது-மலர். நானம்-புழுகு. குரை-ஒலிக்கின்ற. வளி-வாயு, வாதம். ஐ-கபம், சிலேஷ்மம். நெய்த்தோர்-இரத்தம். ஈருள்-ஈரல்; வழும்பு-நிணம்.

(சீவகசிந்தாமணி 1583)

தருமசீலன்

இரத்தாட்சி ௵ மார்கழி ௴.

"தையும் மாசியும் வையகத் துறங்கு"

இதன் பொருள்:— "தையும் மாசியும் - (பனிமிகுந்த காலமாகிய) தைமாதத்திலும் மாசிமாதத்திலும், வை - வைக்கோலால் (வேயப்பட்ட,) அகத்து - வீட்டில், உறங்கு - நீ படுத்து நித்திரை செய்" என்பதாம்.

தைமாதம் முன்பனிக்காலத்தின் பிற்பகுதி; மாசிமாதம் பின்பனிக்காலத்தின் முற்பகுதி. ஆதலால் இவ்விரண்டு மாதங்களிலும் பனி அதிகம். இந்த மாதங்களின் பனி தேகத்தில் மிக்க குளிர்ச்சியையுண்டாக்கிப் பல வியாதிகளை உற்பத்தி செய்து, மனிதர்களை மிகுந்த உபத்திரவத்துக் குள்ளாக்கும். ஆதலின், இந்த மாதங்களில், பனியைத் தடுக்கக் கூடியதும், உஷ்ணத்தைத் தேகத்திற்குப் போதிய அளவாகத்தரக்கூடியது மாகிய இடத்திலே படுத்துறங்க வேண்டும். அதிலும் இராக்காலமே பனி அதிகப் படுதற்குரியதாதலின், அந்த இராத்திரியிலேயே பனியைத் தடுத்துக் கொள்ளத் தகுதியான விடந்தேடிப் படுக்க வேண்டும். வைக்கோலால் வேயப்பட்ட வீடுகளில் பனி இறங்குவதில்லை. அந்த வீடுகள் பனிக்காலத்தில் உஷ்ணத்தோடு கூடியவைகளாயிருக்கும். சுண்ணாம்புக்கட்டிடங்கள் எத்தகைய அழுத்த முள்ளவையெனினும், பனி காலத்தில் அதிகக் குளிர்ச்சியையே கொடுத்துக் கொண்டிருக்கும்; ஆதலின் அவற்றில் படுத்தாலோ குளிர் உபத்திரவத்தால் உறக்கம் கெடுவதோடு பற்பல வியாதிகளு முண்டாகும். கூரை வீடுகளில் படுத்தால் குளிர் உபத்திரவம் இராது; நல்ல நித்திரை யுண்டாகும்; வியாதி நேராது. அதனால் அந்த மிகுந்த பனிக்காலத்தில் வைக்கோலால் வேயப்பட்ட கூரை வீடுகளிலேயே வசித்துப் படுத்துறங்க வேண்டும். இது, மனிதர்க்குச் சுகாதாரத்துக்குரிய செய்கையாதலால், ஔவைப்பிராட்டியார் இந்நீதியை வற்புறுத்திக் கூறினர். ஆதலின் தேகசுகத்தை விரும்பும் ஒவ்வொருவரும் இவ்வரிய நீதியைக் கடைப்பிடித்தொழுகித் தேக சுகம் பெற்று வாழ்வாராக.

(திருவருட் சகாயம்.)

210462

இரகு வம்சம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை-8, பக்கம் 153)

அப்பால் சுக்ரீவன், ஸீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக வானரர்களைச் சகல திக்குகளிலும் ஏவினான். அவர்கள், காதலியைப் பிரிந்த இராமனுடைய மனோரதங்களைப்போல, அங்குமிங்கும் அலைந்தனர். பிறகு ஹநுமான் ஸம்பாதியைக் கண்டு ஸீதை அசோகவனத்தி லிருப்பதைத் தெரிந்துகொண்டு, பற்றற்றவன் ஸம்ஸாரத்தைக் கடப்பதுபோல, சமுத்திரத்தைத் தாண்டினர். பிறகு அவர் இலங்கையில் அங்குமிங்கும் தேடிப்பார்த்து முடிவில் அசோக வனத்தில் ஸீதையைக் கண்டனர்; விஷக்கொடிகள் மஹௌஷதியைச் சுற்றிக்கொண் டிருப்பதுபோல, ராக்ஷஸிகள் ஸீதையைச் சூழ்ந்துகொண் டிருந்தனர். உடனே ஹனுமான் இராமன் அடையாளமாகக் கொடுத்த கணையாழியை ஸீதையிடம் கொடுத்தனர். ஸீதையின் குளிர்ந்த ஆனந்தக் கண்ணீரே அக்கணையாழியாக வந்ததுபோலிருந்தது. உடனே ஹநுமான், இராமன் கூறிய சமாசாரங்களால் ஸீதையைத் தேற்றி, அவளிடமிருந்து அடையாளமாக ஓர் இரத்தினத்தைப் பெற்றுக்கொண்டு, நந்தனவனத்தை யழித்து, அவ்விடம் வந்த அக்ஷகுமாரனைக் கொன்றார்; பின்பு இந்திரஜித்தின் பிரம்மாஸ்திரத்தினால் க்ஷணநேரம் கட்டுப்பட்டு விடுபட்டவராய், இலங்கைக்குத் தீமூட்டிவிட்டு, இராமனிடம்வந்து, ஸீதைகொடுத்த மணியைக் கொடுத்தார்; அவ்விரத்தினம், ஜானகியின் மனமே உருவெடுத்து வந்ததுபோ லிருந்தது. இராமன் ஸீதையின் விருத்தாந்தத்தைக் கேட்டதும், அவளைப் பெறுவதற்கு விருப்பமுள்ளவனாய், தடையா யிருக்கும் சமுத்திரத்தை அகழைப்போல் சுலுவில் தாண்டி விடலாமென்று நினைத்தனன்.

பின்பு இராமன், பூமியில் மட்டு மன்றி ஆகாசத்திலும் நெருங்கிச் செல்லும் வானரசேனைகளால் சூழப்பட்டவனாகிப் பகைவரைக் கொல்வதற்காகப் பிரயாணமாகிக் கடற்கரையில் தங்கினான். அப்பொழுது விபீஷணன், அன்புள்ள ராக்ஷஸலக்ஷ்மியினால் போதித்து அனுப்பப்பட்டவன் போல, தெற்குச் சமுத்திரக் கரையில் தன் டிறங்கி யிருக்கும் இராமனிடம் வந்து சரண மடைந்தான். உடனே இராகவன் இராவணனைக் கொன்று இலங்கையில் பட்டாபிஷேகஞ் செய்து வைப்பதாக வாக்களித்தனன். தக்க சமயத்தில் ஆரம்பித்த நீதி மார்க்கங்கள் பயனை யளிக்குமன்றோ?

பின்னர் இராமன், வானரர்களைக்கொண்டு தெற்குச்சமுத்திரத்தில் இலங்கைக்கு அணையைக் கட்டினன்; அது திருமால் சயனித்துக் கொள்வதற்காகப் பாதாளத்திலிருந்து கிளம்பி வந்திருக்கும் ஆதிசேஷனைப் போலிருந்தது. இராமன் அவ்வணை வழியாகக் கடலைக் கடந்து வானர சேனைகளோடு இலங்கையை முற்றுகையிட்டனன். பொன்னிறமான குரங்குகள் பொன்னால் மதில் வைக்கப்பட்டது போல, கூடியிருந்தன. அப்பொழுது இலங்கையில் வானரர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் பயங்கரமான யுத்தம் உண்டாயிற்று. இரு கக்ஷிகளிலும் மாறிமாறி வெற்றி யுண்டாகிய செய்தி எங்கும் பரவியது. பின்பு யுத்தம் கோரமாக நடக்கையில் சிலர் மரங்களைப் பிடுங்கிக்கொண்டு இரும்புக் கட்டுத்தடிகளை முறித்தனர்; மற்றுஞ் சிலர் கற்களால் இருப்புலக்கைகளைப் பொடியாக்கினர்; வேறு சிலர் கூரியநகங்களால் சஸ்திரங்களினும் ஆழமாகக் காயஞ் செய்தனர்; பின்னும் பலர் கற்பாறைகளை எறிந்து மதயானைகளைக் கொன்றனர்.

அப்பால் வித்யுத்ஜிஹ்வன், தனது மாயா சக்தியினால் இராமனைப்போல் ஒரு புருஷனை ஸ்ருஷ்டித்து, ஸீதையின் எதிரில் அவன் தலையைக் கொய்தனன். இதைக்கண்டதும் ஸீதை மூர்ச்சையடைந்தனள்; அப்பொழுது திரிஜடை, 'இதுமாயையேயன்றி உண்மையன்று' என்று சொல்லி, அவளைப் பிழைக்கச் செய்தனள். பிறகு ஸீதை தன் கணவன் பிழைத்திருக்கிறான் என்ற காரணத்தினால் துக்கமடையவில்லை; ஆனால் முன்பு தனது கணவன் உண்மையில் இறந்தானென்றெண்ணித் தான் பிழைத்தது பற்றி வெட்கமடைந்தனள். பின்பு மேகநாதன், இராம லக்ஷ்மணர்களை நாகபாசத்தினால் அசையாமல் கட்டினன்; உடனே அவ்விடம் கருடன், வரவே, அவ்விருவரும் அக்கட்டிலிருந்து விடுதலை யடைந்தனர். அதனால் அவர்கள் க்ஷண நேரம் துன்பப்பட்டது, கனவில் நேரும் துன்பத்தைப்போ லிருந்தது.

அப்பால் இராவணன் சக்தியென்னும் ஆயுதத்தினால் இலக்ஷ்மணனுடைய மார்பைப்பிளந்தனன்; இராமன் அடிக்கப்படாதவனாயினும், அச்சோகத்தினால் மிகவும் வருத்தமடைந்தனன். பிறகு ஹநுமான் 'ஸஞ்ஜீவினி'மலையைப் பெயர்த்து அவ்விடம் கொண்டு வரவே, இலக்ஷ்மணன் களைதீர்ந்து எழுந்து மீண்டும் கணைகளால் ராக்ஷஸர்களை வதைத்து, அன்னோர் மனைவிமார்களைப் பிரலாபிக்குமாறு செய்தனன். சரத்காலம், மேகம் கர்ச்சிப்பதையும் இந்திர

வில்லால் விளங்குவதையும் பொறாததுபோல, இலக்ஷ்மணன், மேக
நாதன் கர்ச்சிப்பதையும் இந்திரவிற்போன்ற வில்லை வைத்திருப்ப
தையும் பொறாமல் அவனைக்கொன்று அவற்றையும் நாசப்படுத்
தினான்.

பின்பு சுக்ரீவன், கும்பகர்ணனுடைய காதுகளையும் மூக்கையும்
அறுத்துச் சூர்ப்பனகைக்குச் சமானனாகச் செய்தனன்; அதனால்
சிற்றுளியால் வெட்டப்பட்ட காவிகளையுடைய மலைச்சிகரம் போ
ன்ற கும்பகர்ணன் இராமனோடு போர்புரியத் தொடங்கினன். உட
னே இராகவன், "இராவணன் தூக்கத்தில் பிரியமுள்ள உன்னை
அகாலத்தில் எழுப்பிவிட்டான்" என்று நினைத்ததுபோல அவனைத்
தீர்க்க நித்திரையை அடையுமாறு செய்தனன். போர்க்களத்தி
லெழுந்த தூசிகள் ராக்ஷஸர்களின் இரத்தநதிகளில் விழுந்தன
போல, பாக்கியுள்ள ராக்ஷஸர்களும் கோடிக்கணக்கான வானரர்
களுக்கிடையில் விழுந்து இறந்தனர்.

பின்பு இராவணன் 'இப்பொழுது உலகம் இராவண சூந்நிய
மாகவாயினும் இராமசூந்நியமாக வாயினும் ஆகிவிடு'மென்று நிச்ச
யித்தவனாய் மாளிகையிலிருந்து மீண்டும் யுத்தஞ் செய்வதற்காகக்
கிளம்பினன். இராமன் தரையிலிருந்து கொண்டும் இராவணன்
இரதத்திலிருந்து கொண்டும் போர்புரியத் தொடங்கியதைப் பார்
த்த இந்திரன், பச்சைக் குதிரைகளோடு ஒருதேரை இராமனிடம்
அனுப்பினன். வழியில் ஆகாசகங்கையின் அலைகளால் கிளம்பிய
காற்றாலசையும் கொடியையுடையதும், வெற்றியை யளிப்பதுமான
அத்தேரில் இராகவன் மாதலியின் கையைப்பிடித்துக் கொண்டு ஏறி
னன். உடனே மாதலி, இந்திரன் கொடுத்த கவசத்தைக் கொடுத்து
இராமனை அணியச் செய்தனன்; அக்கவசத்தில் அஸுரர்களின்
அஸ்திரங்கள் கருநெய்தல்மல ரிதழ்களின் தன்மையைப் பெற்றி
ருந்தன. வெகுகாலமாய் ஒருவரை யொருவர் எதிர் பார்த்திருந்த
மையால், தற்காலம் ஒவ்வொருவரும் தத்தம் புஜபராக்கிரமத்தைக்
காட்டலாயினர். அதனால் இராமனும் இராவணனும் யுத்தஞ் செய்
வது பயனடைந்தது போலாகியது. முன்னிருந்தது போலில்லாத
இராவணன் ஒருவனாயிருந்தும் அவனது கால்களும்கைகளும் தலை
களும்பலவாயிருந்தமையால் அவன் மாதிரு வம்சத்திலிருந்தது
போலப் பல ராக்ஷஸர்களால் சூழப்பட்டவன் போலிருந்தான்.
இராமன் லோக பாலர்களை ஜயித்தவனும், தனது தலைகளைக்
கொய்து சிவனை மகிழ்வித்தவனும், கைலாஸ மலையைப் பந்தாடிய

வனுமான இராவணனைப் பார்த்ததும், 'இவனிடம் என் கைவன்மையைக் காட்டலாம்' என்று மகிழ்ச்சி யடைந்தனன்.

பின்பு மிகுந்த கோபமுள்ள இராவணன் தான் துடிப்பதனால் ஸீதையின் சேர்க்கை ஏற்படுமென்று தெரிவிக்கும் இராமனது வலது புஜத்தில் பாணத்தைப் பிரயோகித்தனன். உடனே இராகவனும் ஓர் பாணத்தை இராவணன் மீது பிரயோகித்தான்; அது அவன் மார்பைப் பிளந்து கொண்டு பாதாள வாஸிகளுக்குப் பிரிய சமாசாரத்தைச் சொல்லுவதற்குச் செல்வதுபோல, பூமியில் நுழைந்தது. அஸ்திரத்தை அஸ்திரத்தினால் தடுக்கும் இராமனும் இராவணனும் வார்த்தையை வாக்கியத்தினால் தடுக்கும் வாதிகளைப்போல ஒருவரை யொருவர் ஜயிப்பதில் முயற்சித்தனர். மதவேழங்களுக்கிடையிலிருக்கும் வேதியைப்போல ஜயலக்ஷ்மியானவள் சௌரியத்தின் மாறுதலால் அவ்விருவருக்கும் இடையில் சாமானியமாக இருந்தனள். அஸ்திரங்களைப் பிரயோகிப்பதனாலும் தடுப்பதனாலும் பிரீதியடைந்த தேவர்களும் அஸுரர்களும் முறையே அவ்விருவர் மீதும் புஷ்பங்களை வர்ஷித்தனர். ஒருவரை யொருவர் குறித்து விட்ட கணைகள் அம்மலர்கள் கீழே விழாவண்ணம் தடுத்துக் கொண்டன.

அப்பால் இராவணன், இரும்பு முள்ளுகள் நிறைந்த *"சதக்னி" யென்னும் ஆயுதத்தை இராமன்மீது பிரயோகித்தனன்; அது அவன் ஜயித்துப் பெற்றுக்கொண்ட யமனுடைய கதையைப்போலிருந்தது. உடனே இராகவன், அது தேரில் வருவதற்குள் அர்த்த சந்திர பாணங்களால் வாழை மரத்தைப்போல, அதைத் தூளாகச் செய்தனன். அதனால் அரக்கர்களின் ஆசையும் அழிந்தது. ஒரே வில்லாளியான இராமன் காதலியின் சோகமென்னும் சல்லியத்தை யெடுப்பதில் ஔஷதம் போன்றதும், பழுதின்றியதும், பிரம்மாவைத் தேவதையாக வுடையதுமான அஸ்திரத்தை இராவணனிடம் பிரயோகித்தான். அது, ஆகாயத்தில் பலவாறு பிரிந்து பல முகங்களைப் பெற்றது. அதனால் அது பயங்கரமான படங்களையுடைய ஆதிசேஷனது உடலைப்போலிருந்தது. இராமன், அவ்வஸ்திரத்தினால் இராவணன் தலைகளை அரை நிமிஷத்திற்குள் விரணவேதனையை அறியாவண்ணம் அறுத்துத் தள்ளினான். இராவணன் சரீரம் விழுந்தருணத்தில், அவனது தலைகள் வெட்டப்பட்டிருப்பது, அலைகளால் பலவாறு தோன்றும் பாலசூரியனின் பிரதிபிம்பம்

* சதக்னி = பீரங்கி.

போலிருந்தது. தேவர்கள், இராவணனது தலைகள் விழுந்ததைப் பார்த்துக்கொண் டிருந்தும், மீண்டும் முளைக்குமோ வென்னும் சங்கையினால், அன்னோர் மனம் விசுவாச மடையவில்லை.

பின்பு தேவர்கள் இறைத்த புஷ்பங்கள், சமீபத்தில் இரத்தினத்தை அணியப்போகும் இராகவன் தலையில் விழுந்தன; மதநீரில் நனைந்தமையால் பளுவுள்ள இறக்கைகளையுடைய வண்டுகள், ஐராவதம் முதலிய திக்கஜங்களின் கபோலங்களைவிட்டு, வாசனை மிகுந்த அம்மலர்களைத் தொடர்ந்து வந்தன. தேவ ஸாரதியானவன், தேவ காரியத்தை முடித்துவிட்டமையால் நாணைத் தளர்த்தி அம்புகளைத் தூணியில்வைத்த இராகவனிடம் விடை பெற்றுக்கொண்டு ஏராளமான குதிரைகளுடன் கூடின தேரை ஆகாயத்தில் செலுத்தினன்; இராவணனுடைய பெயருள்ள கணைகள், அத்தேரின் துவஜஸ்தம்பத்தில் அடையாளஞ் செய்திருந்தன. பிறகு இராகவன், இலங்கையில் விபீஷணனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து, அக்கினிப் பிரவேசஞ் செய்து பரிசுத்தையான ஸீதையையும் அழைத்துக் கொண்டு, புஜபராக்கிரமத்தினால் பெற்ற புஷ்பகவிமானத்தில் ஏறியமர்ந்து அயோத்தியாபுரியைக் குறித்துப் பிரயாணமாயினன். அத்தேரில் சுக்ரீவன் இலக்ஷ்மணன் விபீஷணன் முதலியோர் யாவரும் இராமனைப் பின்தொடர்ந்து சென்றனர்.

பன்னிரண்டாவது ஸர்க்கம் முடிந்தது.

• • •

By: M. M. Narayanasawmy Ayer, (Pandit)

Mudikondan, P. O.

(*via*) *Nannilam.*

ஸ்ரீ ஜிநாயநம.

ஸ்ரீமஹா வீர வர்த்தமான ஸ்வாமிகள் பேரில் தாலாட்டு

கடவுள் வணக்கம்.

1. வேதமொரு நான்கினையும், விரித்துரைத்த வீரனவர்
பாதம் பணிந் துரைத்தேன், பரமனது தாலாட்டை

2. அச்சுத கல்பத்தில், அமரர்சுக மனுபவித்து
அச்சுதன்பின் னங்கிருந்து, ஆடிசுக்கில ஷஷ்டியிலே

3 குண்டலபுரத்திறைவன், சித்தார்த்த கோவினுக்கு
மண்டலத்தோர் போற்ற, வாய்த்தபிரிய காரிணியின்

4. கருப்பத் தவதரித்தார், காசினியோர் கொண்டாட
தருமம் தழைக்கவந்த, தருமரைத் தாலாட்ட

5. காசியப கோத்திரத்தில், நாதமஹா வம்சத்தில்
மாசிலா னவதரித்தான், மன்னர் மனங்களிக்க

6. சித்திரை மாதத்தில், சேர்ந்த சுக்கில பக்ஷந்தனில்
உத்திர நக்ஷத்திரம், வாய்ந்த திரயோதசியன்று

7. உன்னிதமாய் மேதினியில், உற்பவித்தார் வீரனவர்
பொன்னிற மேனியுடன், பொற்புடனே யவதரித்தார்

8. எழுபத்திரண் டாண்டுடனே, எழுமுழ வுபரமதாய்
பழுதில் குணங்களுடன், பரம னவதரித்தார்

9. மார்கழி மாதத்தில் கிருஷ்ணபக்ஷம் தசமியிலே
சீர்பெருகும் அண்ணலும்பின், உத்திர நக்ஷத்திரத்தில்

10. பொருந்துமந்த நாள்தனிலே சாலமஹா வனந்தனிலே
அருந்தவத்தோர் கொண்டாட அண்ணல் துறவடைந்தார்

11. மனோகரோத் தியானத்தில், மராமரந் தன்னடியில்
வானோர்கள் வந்திறைஞ்ச, வைகாசி சுக்கிலத்தில்

12. பொருந்தும் தசமியன்று, உத்திர நக்ஷத்திரம்
பெருமான் வினைகள் வென்று, பேருணர்வைத் தானடைந்தார்

13. கேவலஞ்ஞா னந்தனை, ஸ்ரீவீரனவ ரடைந்தார்
கேவலன் தனைப்பணிய, மூவுலகோர் வந்தடைந்தார்

14. இந்திரர்கள் வந்திறைஞ்சி, யோஜனை ஒன்றதனில்
அந்தமுட னமைத்தார்கள், அறிவற்குப் பொன்னெயிலை

15. கார்த்திகை மாதந்தனில், கிருஷ்ணபக்ஷம் சுவாதியிலே
பூர்வான்ன காலத்தில், சதுர்த்தசி நன்னாள் தனிலே

16. நிருவாணந் தானடைந்தார் பரமன் மஹாவீரனவர்
தருமம் தழைத்தோங்கும் பாபா புரந்தனிலே

17 பாபா புரத்திலுள்ளோர், பார்த்திப ராஞ்ஞையினால்
தீபாலங் காரஞ்செய்து, திருவிழா நடத்தினார்கள்

18. நிருவாணந் தனையிராமன், அடைந்தான் ஞானந்தனையே
திருத்* "தீபாவளி" யென்று, திருநாமம் சூட்டினார்கள்

19. பன்னிரு கணத்தோர்க்கும் தர்மோப தேசஞ்செய்து
உன்னிதமாய்ச் சித்தநகர், தனையடைந்தா ரத்தனவர்

20. மோகங்களை வென்று, மூவுலகும் வந்திறைஞ்ச
ஆகமங்கள் மூன்றும், அவனிதனில் தானுரைத்த

21. பெருமான் புகழதனைக் கூறுமிந்தத் தாலாட்டில்
பெரியோர் குறை நீக்கிக் குணங் கொள்வரென்றெண்ணி

22. சிம்மத்தை சின்னமதாய், மாதாகபக்ஷனுடன்
அம்மனவள் சித்தாயினி உடன் விளங்கும் வீரன்பாதம்

23. பாவம் விலகும் வண்ணம் பன்முறையுந்தானிறைஞ்சி
சீவகன்சொல் தாலாட்டைப் படித்தோரும் கேட்டோரும்

24. இவ்வுலகில் மேன்மையுற்று இந்திரசுகமனுபவித்து
எவ்வுலகும் போற்றும் இறைவர்பதமடைவார்.

சுபம்.

அ. ஜீவேந்திரன், திருச்சி.

தேகப் பயிற்சி.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்."

மானிடர்களாகிய நாம் நமது தேக சௌக்கியத்தைக் கவனிக்க வேண்டுவது அவசியமாகும். நாம் நமது சரீரத்திற்கு சௌகர்யத்தைத் தேடிக்கொள்ளாவிடின், அது நமது அபிவிர்த்தியைத் தடை செய்கிறது. நமக்கு அசௌக்கியம் அதிகமாகுந்தோறும் எல்லா விஷயங்களிலும் வெறுப்பை யுண்டுபண்ணி மாணத்தைக் கொடுக்கின்றது. தற்காலத்தில் பெரும்பாலோர் தங்கள் தேகசௌக்கியத்தை அறவேயொழித்துத் தங்கள் காலத்தையெல்லாம் கல்வி விஷயமாகச் செலவு செய்கின்றனர். கல்வி அவசியமெனினும், தேக சுகத்தைக் கவனியாது பூரண காலத்தையும் அதற்குச் செலவிடல் பொருந்தாது. அதனால் அவர்கள் பற்பல வியாதிகளையும் அடைந்து, பலஹீனர்களாகி சீக்கிரத்தில் மாணத்தை யடைகின்றனர் என்பது கண்கூடு. இதனால் தாங்கள் பலநாள் வருந்திக் கற்றதும்

* தீபாவளி = தீபத்தின் வரிசை.

வலியிலாது போகின்றது. "சுவரை வைத்துக்கொண்டு சித்திரம் எழுது" என்பதுபோல் முதன்முதல் சரீர சௌக்கியத்தைத் தேடிக்கொண்டல்லவோ, கல்வி விஷயத்தை நாடவேண்டும். இங்குத் தேகப்பயிற்சியைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

தேகப் பயிற்சியென்றால் தேகம், பலத்தையும், சுகத்தையும் அடைவதற்கு முக்கியமான சாதனங்களைப் பயிலுதல் என்பது பொருள். தேகம் நல்ல நிலைமையிலிருந்தால் மனமும் நல்ல நிலைமையிலிருக்கும். தேகம் திடமாகவும், சுகமாகவும் இருந்தால்தான் மனதை ஓர்வழியில் நிறுத்த அநுகூலமாகும். மேலும் ஆபத்துக் காலத்தில், தைர்யத்துடன் அவ்வாபத்தை எதிர்த்து, அதினின்றும் நீங்குதற் கேதுவுண்டாகும்.

நமது தேசத்தில் தேகப்பயிற்சியில் தேர்ந்த அநேகர்களிருந்தனர். இப்போதும் சிலர் இருக்கின்றனர். உதாரணமாக ஜெம்புலிங்க நாடார், இராமமூர்த்தி, கொடுக்கூர் ஆறுமுகம் முதலியோர்கள் சரிதங்கள் கேட்கத்தக்கன. மேலும் இவர்களை இந்திய ராபின் (Robin hood) கூட் என்றே சொல்லவேண்டும். நம் நாட்டில் முன்னாளில் சிலம்பக்கூடங்க ளென்ன, மல்யுத்த சாலைகளென்ன ஆகிய இவைகள் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு தெருவிலும் செறிந்து விளங்காநின்றன. இக்காரணங்களினால்தான், நம் முன்னோர்கள், யாதொரு வியாதியும் அணுகாமல் திடகாத்திராராய் விளங்கினர். ஆனால் இக்காலத்தவர் அவைகளை அடியோடு மறந்துவிட்டனர். ஆனால் சிலர் பயின்றும் வருகின்றனர்.

கூலிவேலைசெய்யும் தொழிலாளிகள் யாதொரு வியாதியும் அண்டாது திடகாத்திரரா யிருக்கின்றனர். ஏனெனில், அவர்கள் தினந்தோறும், தங்கள் தேகத்தில் வியர்வை உண்டாகும்படி உழைத்து வருவதினால் அவர்களுக்கு ஆகாரம் நன்றாக ஜீரணமாகிறது. அதனால் புது இரத்தம் உண்டாகி, சரீரமுழுவதும் பாவி பிணிகளை நீக்கி பலத்தைக் கொடுக்கிறது. ஏனையோர் இவ்வாறு செய்யாததினால் இருந்தவிடத்திலேயே வியாதியை வரவழைத்துக் கொள்ளுகின்றனர்.

தேகப் பயிற்சி செய்வதற்குப் பாலிய பருவமே தகுந்த காலமாகும். இக்காலத்திலுள்ள மாணக்கர்களுக்குத் தேகப்பயிற்சி இன்னது என்று தெரியாது. இவர்கள் உத்தியோகத்தையே பெரிதும் நாடுகின்றனர். அதனால் கூடிய சீக்கிரத்தில் புதிதுபுதிதான வியாதி

களை வரவழைத்துக் கொண்டு துன்புறுகின்றனர். மேல் நாடுகளில் ஒரு மனிதனுடைய சராசரிவயது 45-க்கு அதிகமாக இருக்கிறது. ஆனால் நம் நாட்டிலோ ஒரு மனிதனுடைய சராசரிவயது 25-யாம். ஏனெனில் மேனாட்டார்கள் தேகப்பயிற்சி செய்து வருவதும் நம்மவர் அஃதில்லாதிருப்பதுமே காரணம். மேலும் அவர்கள் முன்னேற்ற மடைந்ததற்கும் தேகபலமே ஒரு காரணமாகும். முற்காலத்தில் நம் நாட்டில் தேகத்திற்குப் பொருத்தமான பயிற்சிகளை ஏற்படுத்தியிருந்தனர். அப்பயிற்சிகள் நம் தேகத்திலுள்ள எல்லா அங்கங்களும் வலிமையடையத் தக்கவையாகும். ஆனால் இக்காலத்திலுள்ள பயிற்சிகளோ! தீங்கை விளைவிக்கக் கூடியனவா யிருக்கின்றன.

வித்தியாப்பியாசிகளுக்கு தேக சௌக்கியம் இன்றியமையாதது. ஆகையால் ஒவ்வொரு மாணவனும், தினந்தோறும், காலையிலும், மாலையிலும், தேகத்தில் வியர்வை உண்டாகுமாறு தேகப் பயிற்சி செய்து பின்னர் தங்கள் படிப்பு விஷயத்தில் கவனஞ் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யின் தேகத்திலுள்ள சோம்பல் முதலிய துர்க்குணங்கள் நீங்கி அறிவு விர்த்தியாகும். பந்தாடுதல், குதிரை ஏறிச் சவாரி செய்தல், நிலங்களைக் கொத்துதல், சிலம்பவித்தைப் பழகுதல், இரண்டுமூன்று மைல் உலாவிவருதல் ஆகிய இவைகளைப் பழகுவதினால் தேகம் உறுதியடைகிறது. மனமும் சுத்தப்படுகிறது. இவ்வாறு பழகுவதினால் யாவருக்கும் யாதொரு சிரமமிராது. தேகத்திற்கும் அழகுண்டாகும்.

இப்பயிற்சிகளைச் செய்த பின்னர் உடுத்தியிருக்கும் உடைகளைக் கழற்றி விட்டுச் சுமார் 5-நிமிஷம் வரை வீணேயிருந்து, பின்னர் குளிர்ந்த ஜலத்தில் வியர்வை போகும்படி ஸ்நானஞ் செய்ய வேண்டும். பின்பு உலர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு தத்தம் காரியங்களைக் கவனிக்க வேண்டும். நாம் பயிற்சி செய்த உடனே ஸ்நானஞ் செய்தால் நன்றாக வியர்வை வெளிவராமல் நின்று விடும். பயிற்சி செய்து வர்ததும் ஸ்நானஞ் செய்யாமலும், புது உடையை அணியாமலு மிருந்தால், அவ்வசுத்த வியர்வை வெளிவராமல் சரீரத்திலேயே தோய்ந்து வியாதியை விளைவிக்கும்.

ஆகையினால் சகோதரர்களே! காலையிலும், மாலையிலும், பத்து நிமிஷ நேரமாவது தேகப் பயிற்சியில் செலவழித்துவரின், நாம் முன்னேற்றமடைவதோடு, நந்தாய் நாடும் க்ஷேமமடையும் என்பதில் ஐயமில்லை. எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் நமக்கு கிருபை செய்வாராக. சுபம்.

எஸ். என். இராமு,

கூறைநாடு.

ஞானதீபம்.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-7, சஞ்சிகை-7, பக்கம்-136.)

"பல்லாவுளுய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத் - தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு"

என்றதால், தாபதரின் தலைமேல் குப்பைகளைக் கொட்டிய தோஷமாகிய, பழவினையும், பசுக்கள் நிரையில் விடப்பட்ட இளங்கன்று தன் தாயைத் தேடிச் சேர்வதுபோல், இவளைச் சூழ்ந்தது. இவள் பிறந்ததும், தாய், தந்தை, மற்றுமுள்ள சுற்றத்தாரனைவரும் இறந்தனராதலால், உலகத்தோர், இவளை "கர்மி" என்றழைக்கத் தலைப்பட்டனர். அந்தோ! கர்மத்தின் செயல் இருந்தவாறென்னே! தாய், தந்தை, சுற்றத்தார் முதலானவரை யிழந்து போற்றுவாரில்லாத அனாதையாகி, கந்தைபொத்திய மேனியளாய், கஞ்சி யிரந்துண்டு, காலங்கழிக்கும் இவளை, உலகத்தோர் "கர்மி" "கர்மி" என்றும் நிந்தித்துப் புறக்கணித்தது இவளுடைய ஊழ்வினையின் பயனன்றோ? இப் பிறப்பில், யாதொரு தீங்கு மிழைக்காத, இப்பெண்மணி இத்தகைய துன்பம் அடைவானேன்? முற்பவத்தில் முனிவர் தலைமேல் குப்பையைக் கொட்டிய தோஷமன்றோ? இவளை இப் பிறப்பில் சூழ்ந்தது. அக்கம் பக்கம் பார்த்து அக்குப்பையைச் சிறிது ஜாக்கிரதையுடன் கொட்டி யிருந்தால் இவ்விதத் துன்பம் அடையாமல் இருக்கலாமே! அவளுற்ற துன்பத்திற்கு அவளது அஜாக்கிரதையே காரணமாயிற்றன்றோ? உண்மையிவ்வாறிருக்க, பாதவர்களை அவமதித்து, முக்கரணத்தாலும் தீங்கிழைக்கும் தீயோர்கள் எக்கதியடைவரோ யானறிகிலேன். இதென்னே பேதைமை! பொன்னிலமாதரென்ற மூவகைப் பொருளையும் விடமெனநீத்து, பூவுலகில் அவதரித்துள்ள ஜீவர்களனைவர்களுக்கும் இதத்தையே செய்யும், இயல்புடையோராய், தம்புண்ணிய பலத்தால் பெற்ற கேவலஞ் ஞானம் என்னும் தீங்கனியை, "தமர்" "பிறர்" என்ற இத்தகைய பேதபாவனை தவிர்ந்தோராதலால், மனிதரேயன்றி மாக்களும் பெற வேண்டும் என்ற காருண்ய சித்தராகி, "அஹிம்சாபரமோதர்ம:" என்ற அருள்வாக்கையே ஆபரணமாகப் பூண்ட அறவோர்களை அவனியில் சில அறிவிலிகள் அவமதிப்பதேன்? அவர்கள் இத்துறவிகளுக்குவிடாது தீங்கிழைப்பது யாது காரணம் பற்றியோ. யானறிகிலேன். அழுக்காறோ? அல்லது அறியாமையோ? கிள்ளை மொழியாளே! கேட்பாயாக கந்தைபொத்திய மேனியோனாகிய குசேலப் பெரியோனைக்கண்டு, கண்ணபிரானும் கைதொழுதனனென்றால், நன்ஞானம் நற்காட்சி, நல்லொழுக்கமென்ற அகவணிகளை அணிந்து பரமாத்மசமாதியில் ஆழ்ந்துள்ளமையால், புறவணிகளும் பட்டாடையும், பொன்னாபரணங்களும்,

தம் தேகத்தில் உள்ளனவோ? இல்லனவோ? என்பதையே அறியாமல் எங்கும் பரந்த அம்பரமாகிய இயற்கை ஆடையையே அணிந்துள்ள அறவோர்களின் பெருமையை ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனும் அறையவொண்ணாது. அத்தகைபதை என் புன்னாவும் புகலவல்லதோ? ஒருவருக்கும் தீங்கிழைக்காத இப்பெரியோர்களைப் பிறர் அவமதித்து, தீவினைத் தேரேறித் தீநரகிற்கே செல்வானேன்? என்றால், இது ஒருவருடைய குற்றமன்று. அஞ்ஞானத்தால் சூழ்ந்த அவரவர் மனமே காரணம்.

இதுபற்றியன்றோ, தெய்வப்புலமை ஸ்ரீ திருத்தக்கதேவரும்,

"பேதமை யென்னும் வித்திற் பிறந்து பின் வினைகளென்னும்
வேதனை மரங்கணறி வேட்கைவேர் வீழ்த்து முற்றாக்
காதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட் டவலம் பூத்து
மாதுயரிடும்பைகாய்த்து மரணமே கனியும்"

என்று கூறியுள்ளார். பொன்னிலமாதர்களை யடையவேண்டுமென்ற ஆசையென்ற வேரையும், அப்பொருளினடைவால் நமக்கு ஏற்படும் களிப்பும் அவைகளை அடையப் பெறுமையால், "அவற்றை எப்படியாவது அடைய வேண்டும்." என்று மீண்டும் மீண்டெழுகின்ற காதலாகும் கிளைகளையும், அவல மாகும் புஷ்பங்களையும், கவலையென்னும் காய்களையும், மாண மென்ற கனிகளையும் உடைய தீவினைஎன்னும் மரங்கள், அஞ்ஞானம் அல்லது அறியாமை என்ற வித்தினிடமாகவே உண்டாகின்றன. ஆதலால், ஜீவர்கள், நன் ஞானத்தையும் நல்லொழுக்கத்தையும், அடைய வொட்டாமல் தடுத்து அறிவனற மொழிகளிலும் நம்பிக்கையை இழக்கச் செய்வது இவ்வறியாமையே!

இதின் தூண்டுதலால், மனிதர்கள் அவ்வறியாமையை அகற்றிய அறிவோர்களுக்கு எண்ணில் இடுக்கண் புரிகின்றனர்.

நமது அறியாமையை அகற்றுவதற்கு, "பாலுடன் நெய் பெய்யும் தாயனையர்" ஆகிய, அம்முனிவரர்கள், ஞானமிர்தத்தை வலியப் புகட்ட வருங்காலையில், என்செய்கின்றோம்? "இவர்கள் சொல்வது, சுருதி, யுக்தி, அனுபவத்திற்கு பொருத்தமா யிருக்கிறதா? உண்மையைக் கேட்டுத் தெளிவோம்" என்று நூற்பொருளை ஆராய்ச்சி செய்யும் அறிவுடையோரின் ஒழுக்கத்தைவிட்டு, நமதறியாமையின் தூண்டுதலால், அம்மொழிகளைக் கேளாது, நாணமின்றி, நம் வாய் ஞானத்தை எடுத்துரைப்போம். அவற்றை அவ்வறிஞர், நியாய விரோதமென எடுத்துக்கூறில், மேலொன்றிற்கும் உரைப்பதற்கு வகையறியாமல், நமது கைஞானத்தைக் காட்டுவோம் (அடிப்போம் அல்லது நமது கரங்களால் செய்யக்கூடிய இடையூறுகளை விளைவிப்போம்.)

"இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்துவிடல்"

என்ற திருமறையினுட் பொருளை உணர்ந்த அம்மாதவப் பெரியோர் காற்று, மழை, வெயில், கொடுமையாகிய பனி, முதலியவற்ருல், அசையாது நிற்கும் மலையைப்போல் நின்று, சினம், கடுஞ்சொல், இம்சை முதலிய காற்றினல் அசையாமல் நிற்கும் அறிவையுடையோராய் எப்பொழுதும் நமக்கு இன்பத்தையே விளைவிப்பார். என தருமைக் கமலா! இனி நமது கதாநாயகியாகிய கர்மியின் கதையை நாடிச்சொல்வோம். கன்னல் மொழியாளே! கேட்பாயாக. சுற்றத் தாரை யிழந்தும், செல்வத்தை யிழந்தும், பலராலும் புறக்கணிக்கப் பட்ட அக் கர்மியானவள், எண்ணிலா இடுக்கணுற்று, முடிவில் ஒரு தாபதரைக்கண்டு பின்வருமாறு, கண்ணீர் சொரிந்து, தன் மதியன்ன முகத்தைப் பாழ்படுத்திக்கொண்டு, "ஹே! ஸ்வாமி! தங்களிருபாத கமலங்களையும் சாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கின்றேன். எனது துயரத்தைப் போக்குவது தங்கள் கடமையன்றோ? நான் கதியற்றவள்; தந்தை தாயார் முதலிய சுற்றத்தாரனைவரையு மிழந்தேன்; உடுக்கவோ ஆடையில்லை; உண்பதற்கோ உணவில்லை; ஆதரிக்கயாருமில்லை. கண்டவர்கள் என்னைக் கர்மி என்று மழைக்கின்றனர் என்துயரம் நீங்கும் உபாயத்தை அறிவித்தருள்வது தங்கள் கடமை" என்றிறைஞ்சினள்.

(தொடரும்)

A. ஜீவேந்திரன்.

நல்லினஞ் சேர்தல்.

(முன் தொடர்ச்சி)

மேலும் இவர்களோடு கூடிப் பழகி, இவர் சந்தோஷத்தைப் பெறுவது நன்மையைத்தரும் என்று ஓரிடத்தில் துவாரகாபதிக்கு அதிபதியாகிய கண்ணபிரான் கூறியது ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது:—

"நல்லார் சொல் விரும்புவது நல்லாரைக் காண்பதுவு
நல்லார்க்கொன் றுதவுவது நல்லாரைப் புகழ்வதுவு
நல்லார்கன் றென்றுரைப்ப நவிற்றியவிவ் வெலாமடங்க
நல்லார்கட் பென்றமுற னன்றன்றே நான் மறையோய்."

என்பதாம். இதனல் நல்லார் நட்புபர்வு புலப்படும். இன்னும்

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று."

என்பதும் வலியுறுத்தும்.

ஊரிலுள்ள நீரானது சிறப்புள்ள நதி அல்லது குளங்களைச் சேர்ந்தால் அந்நீரும் எவ்வாறு புண்ணிய தீர்த்தமாகின்றதோ அது போல் தாழ்ந்த குலத்தில் பிறந்தோராயினும் இந்நல்லோர் நட்பைப் பெறின் பெருமை யடைந்து சிறப்புற்று நிற்பர்.

"நல்லமண முள்ளதொன்றை நண்ணி யிருப்பதற்கு
நல்லமண முண்டா நயமதுபோல் - நல்ல
குணமுடையோர் தங்களுடன் கூடியிருப் பார்க்குக்
குணமதுவே யாஞ்சேர்வு கொண்டு."

என்று உபதேச இரத்தினமாலையிலும்,

"ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக் கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா - மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து."

என்று நாலடியாரிலும் கூறியிருப்பதைக் காண்க.

எவ்வாறு மதியின்கட்டோன்றுங் களங்கமும் பூஜிக்கப் படுகின்றதோ அவ்வாறே மேலோரைச் சார்ந்த கீழோரும் மேன்மையடைவர். "மிக்காரைச்சேர்தன் மிகமான முன்னினிதே" பாலோடு கூடிய நீரானது பாலாவது போல் நற்குணமுடைய பெரியாரோடு கூடிய சிறியாரது சிறுமையும் தோன்றாது. இதைப்பற்றி யல்லவா! கவிச்சக்கரவர்த்தியும்,

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினுமவர்தம்
மருண்டதன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே."

என்று கூறினர்.

"தொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபு
லொல்காவே யாகு முழவ ருழுபடைக்கு
மெல்லியரே யாயினு நற்சார்வு சார்ந்தார்மேற்
செல்லாவாஞ் செற்றார் சினம்."

என்றவாறு மரக்கட்டையை அடுத்துள்ள புற்கள் கலப்பைக்கு எங்ஙனம் அசையாதோ அவ்வாறே வலியாரைச் சார்ந்த மெலியார் பகைவர்கட்கு அஞ்ச மாட்டார்கள். இன்னும் "தக்காரினத்தனாய்த் தானொழுக வல்லானைச், செற்றார் செயக்கிடந்ததில்." "மெலியோர் வலியவிரவலரை யஞ்சார், வலியோர் தமைத்தாம் மருவின்" என்னும் நீதிகளும் கவனிக்கத்தக்கன. நிலத்தின் வளமையால் நெல் பயிராவது போல், தத்தம் சேர்க்கையின் நன்மையால் மனிதர் சான்றோர் ஆவர்.

ஆனால் பலமான கப்பல் புயல் காற்றினால் எவ்வாறு சிதறுண்டு போகிறதோ அதுபோல் மேன்மை பொருந்திய நல்லோர்கள் தீயவர்பாற் சேரின் அவர்களும் தீயவராவர். இயற்கையில் நல்லவராயினும் சேர்க்கைக்குணத்தால் தீயவராவர். இன்னும் இதைப்பற்றி,

"நிலநலத்தா னந்திய நெல்லேபோற் றத்தங்
குலநலத்தா லாகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்." (நாலடி)

"தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது."

"மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானு
மின்னா னெனப்படுஞ் சொல்." (குறள்)

"சந்தனத்தைச் சார்தருவுந் தக்க மணங்கமழுஞ்
சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற—வந்தவனந்
தானுமச் சந்தனமுந் தன்னினமு மாள்வதன்றித்
தானுங் கெடச்சுடுமே தான்." (திருவெண்பா)

"மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
வினத்தா லிகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
யெறிபுனந் தீப்பட்டக் கால்." (நாலடி)

"மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்கு
இனநல மேமாப் புடைத்து." (தமிழ்மறை)

என்னும் பாக்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. இவற்றால் தீயினஞ் சேர்தலின் கேடு உணரப்படும்.

ஒருவன் எல்லாப் பாக்கியங்களையும் பெற்றிருப்பினும் பெரியார் சிநேகத்தைப் பெறுவிடின் அவன் யாதொரு சுகமும் இல்லாதவனாவான். எவன் ஒருவன் பெரியாரைத் தழுவி யிருக்கின்றானோ அவன் எல்லாச் சுகங்களையும் அடைந்தவனாவான் என்று கண்ணபிரான் குசேலரிடங் கூறினார்; அதனால் உயர்நட்பின் தன்மை விளங்கும். அதை,

"பொன்னுள்ளான் பூமியுள்ளான் புந்தியுள்ளா னயிடினு
மென்னுள்ளா னவனவ னிருந்தவர்த நட்பிலனேற்
பொன்னில்லான் பூமியில்லான் புந்தியில்லா னயிடினு
மென்னில்லா னவனவ னிருந்தவர்த நட்புளனேல்."

என்னும் பாடலாலறிக.

"பேயோடு கூடுறினும் பிரிவதரி தரிதென்று
தூயோர்கண் மொழிவராற் றூயோரும் புகழ்தூயோ
ராயோர்கள் பெறுநட்பை யருந்தவத்தாற் பெறலன்றி
ஏயோவெண் மையிற்கிடைப்பி னிகழ்வரோ விகழ்வில்லார்."

என்ற செய்யுளும் அதனை நன்குணர்த்தும்,

தமிழறிந்த அன்பர்காள்! தீப்பழக்கத்தை நீக்கி அப்பெரியோர்கள் நேசமாகிய ஸத்சங்கத்தை நாடுமின். சுபம்.

"குற்றங் களைவோர் குறைவிலா தவரே." (வெ-கை)

முற்றும்.

எஸ். என். இராமு.

கூறைநாடு.